கூடுதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.
முன்னிலை - திரு.எஸ்.விஜய் அழகிரி, பி.காம்.பி.எல்.,
முதல் கூடுதல் சார்பு நீதிபதி,
2025 ம் வருடம் ஜனவரி மாதம் 10 ம் நாள் வெள்ளிக்கிழமை
(திருவள்ளுவராண்டு 2055 – ஸ்ரீ குரோதி வருடம் - மார்கழி திங்கள் 26 ம் நாள்)
இடைநிலை மனு எண்.06/2024
அசல் வழக்கு எண்.536/2022

1. ஈ.சசிகலா

2. எஸ்.சுகந்தி ..மனுதாரர்கள்/வாதிகள்

// எதிர் //

1. எஸ்.பிரசாத்

2. ஆர்.செங்கோட்டுவேல் (இறப்பு) ..எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

07.08.2024 தேதியிட்ட இம்மனு 14.08.2024 ம் தேதி கோப்புக்கு எடுக்கப்பட்ட இம்மனு உ.வி.மு.ச கட்டளை 8, விதி 9, மற்றும் பிரிவு 151 ன் படி மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டு, பதிலுரையை பெற்றுக்கொள்வதற்கு அனுமதி அளிக்க உத்தரவிடக் கோரப்பட்டுள்ளது.

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 11.12.2024 ம் தேதி இறுதியாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.வி.சம்பத்குமார் அவர்கள் ஆஜராகியும், 1 ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.அருண்சேசன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்டும், இதுநாள்வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து மனு கோப்பைப் பரிசீலனை செய்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்:

உத்தரவு

பதிலுரையை பெற்றுக்கொள்வதற்கு அனுமதி அளிக்க உத்தரவிடக் கோரி மனுதாரரால் இம்மனு உ.வி.மு.ச கட்டளை 8, விதி 9, மற்றும் பிரிவு 151 ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு.

2. மனு உரையின் சுருக்கம் பின்வருமாறு:

மனுதாரர் இம்மனுவில் 2 வது மனுதாரர் என்றும், அசல் வழக்கில் 2 வது வாதி என்றும், 1 வது மனுதாரர் இந்த மனுதாரரின் மூத்த சகோதரி

என்றும், இந்த மனுதாரர் தான் அவருக்காகவும் அசல் வழக்கினை நடத்தி வருவதாகவும், 1 வது எதிர்மனுதாரர் இந்த மனுதாரரின் இளைய சகோதரர் என்றும், இறந்துபோன 2 வது எதிர்மனுதாரர் மனுதாரர்களின் தகப்பனார் என்றும், தாவா சொத்துக்கள் இந்த மனுதாரர்களின் தாயாருக்கு பாத்தியப்பட்டு இருந்து அவர் கேன்சர் நோய்யினால் கடந்த 09.02.2019 அன்று எவ்வித விருப்பு உறுதி ஆவணமும் எழுதி வைக்காமல் மேற்படி நபர்களை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார் என்றும், மனுதாரர்கள் 1, 2 எதிர்மனுதாரர்களுடன் கூட்டு சுவாதீனத்தில் இருந்து வந்ததாகவும், அதன் பிறகு கூட்டு சுவாதீனத்தில் பொதுவாக அனுபவிக்க இயலாது சூழ்நிலை ஏற்பட்டதால் மனுதாரர்கள் பாகப்பிரிவினைக்கு அசல் வழக்கினை தாக்கல் செய்திருப்பதாகவும், அசல் வழக்கில் 1 வது பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல் செய்து அதில் மனுதாரர்களின் தாயார் திருமதி.பாப்பு ஒரு பதிவு செய்யப்படாத உயில் மூலம் தாவா சொத்துக்களை மனுதாரர்களை நீக்கிவிட்டு அவருக்கு மட்டும் எழுதி கொடுத்திருப்பதாக கூறியிருப்பதாகவும், மேலும் எதிர்வழக்குரையில் 1 வது பிரதிவாதி பல புதிய சங்கதிகளை கூறி இருப்பதாகவும், அந்த சங்கதிகளுக்கு இந்த மனுதாரர்கள் அதை பொய் என நிரூபிக்கவேண்டுமென்பதற்காக அதனை மறுத்து பதில் உரை தாக்கல் வேண்டி இருக்கிறது என்றும், மனுதாரர்கள் எவ்வித புதிய சங்கதிகளையும் கூறவில்லை என்றும் மேலும் பதிலுரையால் வழக்கின் தன்மை மாறவில்லை என்றும், அதனால் பதிலுரையை பெற்றுக்கொள்வதற்கு அனுமதி அளிக்க கோரி இம்மனு தாக்கல் செய்திருப்பதாக கூறப்பட்டிருக்கிறது.

3. <u>1 வது எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:</u>

மனுதாரர்களின் மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைக்கதக்கதல்ல. மனு சங்கதிகள் அனைத்தும் தவறானது என்றும், தாவா சொத்துக்கள் இந்த எதிர்மனுதாரர் மற்றும் மனுதாரரின் தாயார் பாப்புவுக்கு 24.12.2012 ம் தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் படியும் 21.01.2013 ம் தேதியிட்ட விடுதலை பத்திரத்தின் படியும் தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்டு அவர் இறக்கும் வரை அனுபவித்து வந்ததாகவும், அவர் இந்த எதிர்மனுதாரருக்கு 20.08.2018 ம் தேதியில் தாவா சொத்துக்களை

பொறுத்து அன்பினாலும், பாசத்தினாலும் இந்த எதிர்மனுதாரருக்கு உயில் எழுதி வைத்துவிட்டு 09.02.2019 ம் தேதியில் இறந்துவிட்டார் என்றும், அவர் இறப்பிற்கு பின்னிட்டு தாவா சொத்துக்கள் இந்த எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட அவருடைய அனுபவத்தில் இருந்து வருகிறது என்றும், மனுதாரர்களுக்கு தாவா சொத்தில் எவ்வித பங்கும் கிடையாது என்றும், மேலும் அவர்கள் கூட்டு சுவாதீனத்திலும் கிடையாது என்றும், மனுதாரர்களுக்கு 11.08.2019 ம் தேதியிலேயே உயில் பற்றி தெரியவந்துள்ளது என்றும், எதிர்வழக்குரையில் இந்த எதிர்மனுதாரர் புதிய சங்திகளை சொல்லவில்லை என்றும், மனுதாரர்களுக்கு ஏற்கனவே தெரிந்த சங்கதிகளை தான் சொல்லி இருக்கிறார் என்றும், இந்த எதிர்மனுதாரர் 09.10.2023 ம் தேதியிலேயே எதிர்வழக்குரை தாக்கல் செய்து 398 நாட்கள் கடந்த பிறகு எதிர்வழக்குரைக்கு பதில் கூறவேண்டுமென்று கூறி இம்மனு தாக்கல் செய்திருப்பது ஏற்புடையது அல்ல என்பதால் இந்த மனு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்று கூறி எதிருரை தாக்கல் செய்திருக்கிறார்.

4. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியமோ, ஆவண சாட்சியமோ தாக்கல் செய்யப்படவில்லை.

5. இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினையாகும்.

6. <u>பிரச்சினைக்குத் தீர்வு:</u>

மனுதாரர்கள் தரப்பில், மனுதாரர் இம்மனுவில் 2 வது மனுதாரர் என்றும், அசல் வழக்கில் 2 வது வாதி என்றும், 1 வது மனுதாரர் இந்த மனுதாரரின் மூத்த சகோதரி என்றும், இந்த மனுதாரர் தான் அவருக்காகவும் அசல் வழக்கினை நடத்தி வருவதாகவும், 1 வது எதிர்மனுதாரர் இந்த மனுதாரரின் இளைய சகோதரர் என்றும், இறந்துபோன 2 வது எதிர்மனுதாரர் மனுதாரர்களின் தகப்பனார் என்றும், தாவா சொத்துக்கள் இந்த மனுதாரர்களின் தாயாருக்கு பாத்தியப்பட்டு இருந்து அவர் கேன்சர் நோய்யினால் கடந்த 09.02.2019 அன்று எவ்வித விருப்பு உறுதி ஆவணமும் எழுதி வைக்காமல் மேற்படி நபர்களை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார் என்றும், மனுதாரர்கள் 1, 2 எதிர்மனுதாரர்களுடன் கூட்டு சுவாதீனத்தில் இருந்து வந்ததாகவும், அதன் பிறகு கூட்டு சுவாதீனத்தில்

பொதுவாக அனுபவிக்க இயலாது சூழ்நிலை ஏற்பட்டதால் மனுதாரர்கள் பாகப்பிரிவினைக்கு அசல் வழக்கினை தாக்கல் செய்திருப்பதாகவும், அசல் வழக்கில் 1 வது பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல் செய்து அதில் மனுதாரர்களின் தாயார் திருமதி.பாப்பு ஒரு பதிவு செய்யப்படாத உயில் மூலம் தாவா சொத்துக்களை மனுதாரர்களை நீக்கிவிட்டு அவருக்கு மட்டும் எழுதி கொடுத்திருப்பதாக கூறியிருப்பதாகவும், மேலும் எதிர்வழக்குரையில் 1 வது பிரதிவாதி பல புதிய சங்கதிகளை கூறி இருப்பதாகவும், அந்த சங்கதிகளுக்கு இந்த மனுதாரர்கள் அதை பொய் என நிரூபிக்கவேண்டுமென்பதற்காக அதனை மறுத்து பதில் உரை தாக்கல் வேண்டி இருக்கிறது என்றும், மனுதாரர்கள் எவ்வித புதிய சங்கதிகளையும் கூறவில்லை என்றும் மேலும் பதிலுரையால் வழக்கின் தன்மை மாறவில்லை என்றும், அதனால் பதிலுரையை பெற்றுக்கொள்வதற்கு அனுமதி அளிக்க கோரி இம்மனு தாக்கல் செய்திருப்பதாக வாதிடப்பட்டது.

6.2 1 வது எதிர்மனுதாரர் தரப்பில், தாவா சொத்துக்கள் இந்த எதிர்மனுதாரர் மற்றும் மனுதாரரின் தாயார் பாப்புவுக்கு 24.12.2012 ம் தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் படியும் 21.01.2013 ம் தேதியிட்ட விடுதலை பத்திரத்தின் படியும் தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்டு அவர் இறக்கும் வரை அனுபவித்து வந்ததாகவும், அவர் இந்த எதிர்மனுதாரருக்கு 20.08.2018 ம் தேதியில் தாவா சொத்துக்களை பொறுத்து அன்பினாலும், பாசத்தினாலும் இந்த எதிர்மனுதாரருக்கு உயில் எழுதி வைத்துவிட்டு 09.02.2019 ம் தேதியில் இறந்துவிட்டார் என்றும், அவர் இறப்பிற்கு பின்னிட்டு தாவா சொத்துக்கள் இந்த எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட அவருடைய அனுபவத்தில் இருந்து வருகிறது என்றும், மனுதாரர்களுக்கு தாவா சொத்தில் எவ்வித பங்கும் கிடையாது என்றும், மேலும் அவர்கள் கூட்டு சுவாதீனத்திலும் கிடையாது என்றும், மனுதாரர்களுக்கு 11.08.2019 ம் தேதியிலேயே உயில் பற்றி தெரியவந்துள்ளது என்றும், எதிர்வழக்குரையில் இந்த எதிர்மனுதாரர் புதிய சங்திகளை சொல்லவில்லை என்றும், மனுதாரர்களுக்கு ஏற்கனவே தெரிந்த சங்கதிகளை தான் சொல்லி இருக்கிறார் என்றும், இந்த எதிர்மனுதாரர் 09.10.2023 ம் தேதியிலேயே எதிர்வழக்குரை தாக்கல் செய்து 398 நாட்கள்

கடந்த பிறகு எதிர்வழக்குரைக்கு பதில் கூறவேண்டுமென்று கூறி இம்மனு தாக்கல் செய்திருப்பது ஏற்புடையது அல்ல என்பதால் இந்த மனு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்று வாதிடப்பட்டுள்ளது.

6.3 மனு ஆவணங்களை பரிசீலனை செய்கையில், மனுதாரர்கள் இருவரும் சகோதரிகள் என்றும், 1 வது எதிர்மனுதாரர் சகோதரர் என்றும் கூறப்பட்டிருக்கிறது. தாவா சொத்துக்கள் மனுதாரர்கள் மற்றும் 1 வது எதிர்மனுதாரரின் தாயாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று இருதரப்பிலும் ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்களின் தாயார் எவ்வித விருப்புறுதி ஆவணமும் எழுதி வைக்காமல் இறந்துவிட்டதாக கூறப்பட்டிருக்கிறது. ஆனால் அது 1 வது எதிர்மனுதாரரால் மறுக்கப்பட்டு 1 வது எதிர்மனுதாரர் மனுதாரர்கள் மற்றும் 1 வது எதிர்மனுதாரரின் தாயார் திருமதி.பாப்பு 20.08.2018 ம் தேதியில் தாவா சொத்துக்களை பொறுத்து உயில் எழுதி வைத்திருப்பதாகவும், திருமதி.பாப்பு இறந்த பிறகு உயில் அமலுக்கு வந்து 1 ம் எதிர்மனுதாரர் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் தாவா சொத்துக்கள் இருப்பதாக கூறப்பட்டிருக்கிறது. திருமதி.பாப்பு எழுதி வைத்ததாக கூறப்படும் 20.08.2018 ம் தேதியிட்ட உயில் செல்லுமா, செல்லாதா என்பது இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் வழக்கு விசாரணையின் இறுதியில் தான் முடிவு செய்ய இயலும். 1 வது எதிர்மனுதாரர் அவரது எதிர்வழக்குரையில் மனுதாரர்கள்/வாதிகளின் பங்குரிமையை மறுத்து தனக்கு 20.08.2018 ம் தேதியிட்ட உயில்படி தாவா சொத்துக்கள் பாத்தியப்பட்டது என கூறியிருக்கிறார். எதிர்வழக்குரையில் கூறப்பட்டிருக்கும் சங்கதிகளை மறுக்கவேண்டுமென்பதற்காக தற்போது தாக்கல் செய்துள்ள பதிலுரையை பெற்றுக்கொள்ளவேண்டுமென்பதற்காக மனுதாரர்கள் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. பதிலுரையில் பாப்பு எழுதி வைத்ததாக கூறப்படும் உயில் மோசடியானது என்றும், அது பதிவு செய்யப்படாதது என்றும் மறுக்கப்பட்டிருக்கிறது. மேலும் திருமதி.பாப்பு எழுதி வைத்ததாக சொல்லப்படும் உயில் மற்றும் எதிர்வழக்குரையில் கூறியிருக்கும் சங்கதிகளை மறுத்து பதிலுரை தாக்கல் செய்திருப்பதாக கூறப்பட்டிருக்கிறது. ஆக எதிர்வழக்குரையில் கூறியிருக்கும் சங்கதிகளை மறுத்து பதிலுரை தாக்கல்

செய்யவேண்டுமென்பதற்காக மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. அசல் வழக்கில் இன்னும் விசாரணை ஆரம்பிக்கப்படவில்லை. இம்மனுவை அனுமதித்து எதிர்வழக்குரையில் கூறியிருக்கும் சங்கதிகளை மறுத்து தாக்கல் செய்திருக்கும் பதிலுரையை பெற்றுக்கொள்ளும் பட்சத்தில் 1 வது எதிர்மனுதாரருக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படப்போவது இல்லை. ஏனென்றால் எதிர்வழக்குரையில் அவர் கூறியிருக்கும் சங்கதிகளை மறுத்து தான் மனுதாரர்களால் பதிலுரை தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. பதிலுரையில் மனுதாரர்கள் புதிய சங்கதிகளை கூறியிருப்பதாக 1 வது எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனுவில் எதுவும் நிரூபிக்கப்படவில்லை. அசல் வழக்கில் இன்னும் விசாரணை ஆரம்பிக்கப்படாததாலும், எதிர்வழக்குரையில் கூறியிருக்கும் சங்கதிகளை குறிப்பாக 20.08.2018 தேதியிட்ட உயிலை மனுதாரர் மறுக்கவேண்டுமென்பதற்காகவும் மற்றும் எதிர்வழக்குரை சங்கதிகளை மறுக்கவேண்டுமென்பதற்காக தாக்கல் செய்துள்ள பதிலுரையை பெற்றுக்கொள்ளவதற்கு இம்மனுவை அனுமதிப்பது நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

முடிவாக,

இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2025ம் வருடம் ஜனவரி மாதம் 10ம் நாள் அவையறிய திறந்த இந்நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

S VIJAY ALAGIRI
Digitally signed by S VIJAY ALAGIRI
Date: 2025.01.10 18:44:57 +0530

முதல் கூடுதல் சார்பு நீதிபதி,

ஈரோடு.

<u>சாட்சிய சான்றாவணப் பட்டியல்</u>

(...இருதரப்பிலும் .. தாக்கல் இல்லை...)

S VIJAY ALAGIRI
Digitally signed by S VIJAY ALAGIRI
Date: 2025.01.10 18:45:04 +0530

மு.கூ.சா.நீ., ஈரோடு.